சுத்தத்திற்கும் சுவைக்கும்
புகழ்பெற்ற சைவ ஹோட்டல்
**தேவி விலாஸ்**
சுத்தம், சுவை,
அன்பான உபசரிப்பு!
சைவபோசனகாரர் மனதில்
என்றும் நிலைத்திருக்கும்
**தேவி விலாஸ்**
(வண்ணைச் சிவன் கோவில் சந்தி)
288, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

★ பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
EELANADU

மலர் 21 கார்த்திகை 7 முஹறம் 2 இதழ் 284
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 23-11-79

RECEIVED
..-11-23

இறக்குமதி செய்யப்பட்ட
❖ பலவித பரிசுப் பொருட்கள்
அழகுசாதனப் பொருட்கள் தையல் வேலைகளுக்குரிய சகல பொருட்கள்,
மற்றும்
❖ ஜப்பான் நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பல தரங்களிலுமுள்ள சாறிகேட்டுக் கருவிகள் யாவற்றையும் மலிவான விலையில் பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்.
**கிருபா கிவ்ற் கவுஸ்**
KIRUBA GIFT HOUSE
சோமட விலாஸ் கட்டிடம்
46, பெரியகடை - யாழ்ப்பாணம்
தொலைபேசி: 8083

# ஈரானுக்கு மீண்டும்
# அமெரிக்கா எச்சரிக்கை!

## பாக். 431—9
## இந்தியா 31—1

பெங்களூர் நவ. 21

பங்களூரில் நடைபெறும் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையிலான கிரிக்கட் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் தனது முதல் இன்னிங்ஸில் 9 விக்கட் நஷ்டத்துக்கு 431 ரன்களை எடுத்து ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. அதன்பின் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த இந்தியா

(5 ம் பக்கம் பார்க்க)

## மெக்கா சம்பவத்துக்கு பல நாடுகள் கண்டனம்

லண்டன், நவ. 22

அமெரிக்கா மீண்டும் ஈரானிய அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. தெஹ்ரானில் பணயம் வைக்கப்பட்டுள்ள அமெரிக்கரின் பாதுகாப்புக்கு ஏதும் ஆபத்து நடக்குமானால் ஈரானிய அரசாங்கமே அதற்கான முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அமெரிக்கா தனது எச்சரிக்கையில் தெரிவித்துள்ளது.

இதே சமயம் ஈரான் தனது கடற்படைகளை பூரண உஷார் நிலையில் இருக்கும்படி உத்தரவிட்டுள்ளது.

அமெரிக்கா தனது பிரஜைகளையும், ராஜதந்திரிகளையும் மீட்பதற்கு பொருத்தமான எந்த நடவடிக்கையையும் எடுப்பதற்கு கடமைப்பட்டிருக்கிறது என்பதை உலக நாடுகளுக்கு அறிவுறுத்த வேண்டுமென்று செனட்டர் எட்வர்ட் கென்னடி கூறியிருக்கிறார்.

பணயக் கைதிகளுக்கு ஆபத்து ஏற்படுமானால் பாரதூரமான விளைவுகளை ஈரான் எதிர் நோக்க வேண்டியிருக்கும் என செனட்டர் ஜெக்ஸன் கூறியிருக்கிறார்.

அமெரிக்கர்கள் எவராவது கொல்லப்பட்டால் அதற்கான தண்டனையை அமெரிக்கப் படைகள் வழங்க வேண்டுமென்று செனட்டர் கெல்சோன் கூறியுள்ளார்.

தெஹ்ரானிலிருந்து பணயக் கைதிகள் பற்றி கிடைக்கும் செய்திகள் கவலையளிப்பதாக இருக்கின்றன. அவர்களில் பெரும்பாலும் கட்டிப்போடப்பட்ட நிலையிலேயே இருக்கிறார்களாம். அவர்களுக்கு மனமாற்றம் ஏற்படுத்துவதற்கும் முயற்சிகள் நடைபெறுகின்றதாம்.

விடுவிக்கப்பட்ட 13 அமெரிக்க கைதிகளும் அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்துவிட்டனர். அமெரிக்க அதிகாரிகள் அவர்களை வரவேற்றனர்.

## ஷா வெளியேறினால் நிலைமை மாறும்?

வாஷிங்டன், நவ. 22

அமெரிக்காவிலுள்ள பதவி இறக்கப்பட்ட ஈரானிய மன்னர் ஷா வேறு நாட்டுக்குப் போனால்தான் தெஹ்ரானில் பணயம் வைக்கப்பட்டுள்ள அமெரிக்கர்கள் விடுவிக்கப்படுவார்கள் என்று பாலஸ்தீன விடுதலை முன்னணிப் பிரதிநிதியொருவர் மூலம் இங்கு ஒரு தகவல் கிடைத்துள்ளது. ஆனால் ஷாவை திருப்பவும் ஈரானுக்கு அனுப்பினால்தான் பணயம் வைக்கப்பட்டுள்ள அமெரிக்கர் எவரும் விடுவிக்கப்படமாட்டார்கள் என புரட்சி மாணவர்கள் கண்டிப்பாக அறிவித்திருக்கிறார்கள்.

## பாக். நிலைமை அமெரிக்கர் வெளியேற்றம்

பாகிஸ்தானில் அமெரிக்கர்களுக்கு அபாயம் ஏற்படலாம் என்ற அச்சத்தினால் அங்குள்ள அமெரிக்கர் அனைவரையும் வெளியேறும்படி அமெரிக்க அரசு உத்தரவிட்டுள்ளது.

பாகிஸ்தானிலுள்ள அமெரிக்க தூதரகத்திற்கு நேற்று முன்தினம் சுமார் 20 ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட்டு கொளுத்தியதில் இரண்டு

(6ம் பக்கம் பார்க்க)

## மொறட்டுவ மாணவர் போராட்டத்தை கைவிட்டனர்
### 'அமிர்' முயற்சி வெற்றி

(கொழும்பு)

மொறட்டுவ பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 8 நாட்களாக உண்ணாவிரதம் செய்து வந்த ஏழு மாணவர்களும் நேற்றுக்காலை தமது உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், கல்வி அமைச்சர் டாக்டர் நிசங்க விஜயரத்ன, வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி ஆகியோருடன் பல்கலைக்கழக மாணவர் தூதுக்குழு பேச்சுவார்த்தை நடத்தியதை அடுத்தே இம்மாணவர்கள் உண்ணாவிரதத்தைக் கைவிட்டனர்.

இப்பல்கலைக்கழக மாணவர்களுக்கு இன்று விடுமுறை ஆரம்பமாகிறது என்றும் மீண்டும் பல்கலைக்கழகம் ஜனவரி 1-ம் திகதி ஆரம்பமாகும் என்றும் பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் திரு அமிர்தலிங்கம் எடுத்துக் கொண்ட முயற்சியின்பேரில் மாணவர் பிரதிநிதிகள் சுமார் 20 பேர் அமைச்சர்களைச் சந்தித்துப்பேசி ஒரு இணக்கம் ஏற்பட வழி ஏற்பட்டது.

பேச்சுக்கள் இரண்டு கட்டங்களாக நடைபெற்றன. முதல்கட்டத்தில் கல்வி அமைச்சரும் எதிர்க்கட்சித் தலைவரும் திரு யோகேஸ்வரன், திரு சம்பந்தன் ஆகியோரும் மாணவர் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். இரண்டாவது கட்டத்தில் இவர்களுடன் பிரதம மந்திரியும் வர்த்தக அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலியும் கலந்துகொண்டனர்.

பேச்சுக்கள் சுமுகமாக முடிந்ததையடுத்து மாணவர் பிரதிநிதிகள் திரு அமிர்தலிங்கத்தைச் சந்தித்து மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவித்துக்கொண்டனர். (ம)

## யாழ். பல்கலைக்கழக மாணவர் ஆதரவு

(யாழ்ப்பாணம்)

மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களின் உண்ணாவிரத இயக்கத்திற்கு ஆதரவு தெரிவித்து யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் நேற்று அடையாள பகிஷ்கரிப்பு செய்தனர்.

மாணவர்கள் நேற்றுக்காலை முதல் வகுப்புகளையும் விரிவுரைகளையும் பகிஷ்கரித்தனர்.

மாணவர் சங்கத் தலைவர்கள் மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர் உண்ணாவிரத நிலைமை பற்றிக் கூடி ஆராய்ந்தபின்னரே அடையாள பகிஷ்கரிப்பு செய்வது பற்றி முடிவுசெய்தனர். (எ)

## கல்விச் சேவை அமைச்சர் லயனல் ஜயதிலகா

(கொழும்பு)

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள கல்விச் சேவை அமைச்சுக்கு குளியாப்பிட்டிய எம். பி.யும் பிரதி கல்வி அமைச்சருமான திரு லயனல் ஜயதிலக்க புதிய அமைச்சராக ஜனாதிபதியினால் நியமிக்கப்பட்டுள்ளார். பாடப்புத்தகங்கள், தளபாடங்கள், வசதிக்கட்டணம், பாடப் புத்தக வெளியீட்டுச்சபை போன்றவற்றுக்கு இவ்வமைச்சு பொறுப்பாக இருக்கும்.

ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு சரத் அமுனுகம தமது இந்தப் பணிகளுடன் புதிய அமைச்சின் செயலாளராகவும் கடமையாற்றுவார்.

## ஹிஜ்ரி நூற்றாண்டையொட்டி
## 6 சிங்கள, 4 தமிழ், 2 முஸ்லிம் கைதிகள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

ஹிஜ்ரி நூற்றாண்டு ஆரம்ப விழாவையொட்டி நேற்றுக்காலை யாழ்ப்பாணச் சிறையிலிருந்து 12 சிறைக் கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். 6 சிங்களக் கைதிகள், 4 தமிழ்க் கைதிகள், 2 முஸ்லிம் கைதிகள் ஆக 12 பேருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்பட்டன.

சிறைக்கைதிகள் விடுதலை செய்யப்படவும், யாழ். வை. எம். எம். ஏயினர் இசைசங்கம் உணவுப் பொட்டலங்களை வழங்கினர்.

பி. எம். பியதாஸ், ஸ்ரான்லி பெரேரா, மாஸ்லின், சேனவிரட்ன, ஆரியபால, ஸ்ரீதரன் காளிமுத்து, வி. பாலச்சந்திரன், எம். மனோகரன், எம். எம். பாரூக், மொகமட் ஹனிபா ஆகியோரே விடுதலை செய்யப்பட்டவர்களாவர். (செ)

### விடுதலையானவர்களுக்கு அரச அதிபர் புத்திமதி

(யாழ்ப்பாணம்)

"ஹிஜ்ரி நூற்றாண்டு ஆரம்ப விழாவையொட்டி, சிறையிலிருந்த நீங்கள் 12 பேரும் விடுதலைசெய்யப்பட்டுள்ளீர்கள். விடுதலை பெற்ற நீங்கள் அனைவரும், உங்கள் பகுதிக்குச் சென்று, உங்கள் மக்களுடன் இணைந்து புதுவாழ்வினை ஆரம்பிக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்

(5ம் பக்கம் பார்க்க)

## புங்குடுதீவுச் சம்பவம்:
## யாழ். எஸ். பி. சமாதானமாக தீர்த்துவைத்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள டாக்ஸி உரிமையாளர்களுக்கும், புங்குடுதீவைச் சேர்ந்த கார் உரிமையாளர்களுக்கும் இடையில் ஏற்பட்ட தகராறை யாழ் பொலிஸ் அதிபர் திரு கிங்ஸ்லி விக்கிரமசூரியா சமாதானமாக தீர்த்து வைத்தார்.

புங்குடுதீவில் நடைபெற்ற சுமார் ஒரு லட்சம் ரூபா கொள்ளையை தொடர்ந்து அங்கு தொண்டர்சபை ஒன்று அமைக்கப்பட்டு இரவில் வரும் வாகனங்களை சோதனையிட்டு வந்ததாகவும், நேற்று முன்தினமிரவு புங்குடுதீவுக்கு சென்ற டாக்ஸி ஒன்றை தொண்டர் சபையினர் மறித்தபோது, டாக்ஸி வேகமாக சென்றதாகவும், பின்னர் திரும்பிவந்தபோது டாக்ஸியிலுள்ளவர்கள் தாக்கப்பட்டதாகவும் இச்சம்பவம் பற்றி கூறப்படுகிறது.

தாக்கப்பட்ட டாக்ஸி சாரதியும் மற்றவரும் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்தை சேர்ந்த முதலாளியொருவர் பத்தாயிரம் ரூபாவுடன் டாக்ஸியில் சென்றதாகவும் வழியில் தொண்டர்சபையினர் மறித்த

(5-ம் பக்கம் பார்க்க)

# "அமெ. இராணுவநடவடிக்கைக்கு அஞ்சோம்; இலட்சியத்துக்காக இறக்கவும் தயார்!

## அபகரித்த பணம், சொத்துக்களுடன் ஷாவை திருப்பி அனுப்பவேண்டும்

### விடுவிக்கப்பட்ட பணயக்கைதி மூலம் ஈரான் மாணவர்கள் அறிவிப்பு

தெஹ்ரான், நவ 22

பணயக் கைதிகளை விடுதலை செய்யாவிடின் ஈரான் மீது இராணுவ நடவடிக்கை எடுக்கப்படுமென்ற அமெரிக்காவின் அறிவிப்புக்கு நம் பயப்படவில்லை. இலட்சியத்திற்காக நாம் உயிர் துறக்கவும் தயாராக இருக்கிறோம்.

ஈரானிலிருந்து அபகரித்துச் சென்ற பணத்துடனும், சொத்துக்களுடனும் மாஜி மன்னர் ஷா ஈரானுக்கு திருப்பி அனுப்பப்பட வேண்டும். அன்றேல் பணயக் கைதிகளை விடுதலைசெய்யமாட்டோம்.

இதைவிடுத்து அமெரிக்கா தனது படைப்பலத்தினுல் பணயக் கைதிகளை விடுவிக்கப் போவதாக அச்சுறுத்தினாலோ அன்றேல் முயற்சித்தாலோ பணயக் கைதிகள் அனைவரும் கொல்லப்படுவர். அத்துடன் அமெரிக்கதூதரகமும் வெடிவைத்துத் தகர்க்கப்படும்.

இவ்வாறு அமெரிக்க தூதரக அதிகாரிகளை பணயம் வைத்திருக்கும் ஈரானிய மாணவர்கள் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவித்துள்ளனர்.

இந்த அறிக்கை அண்மையில் விடுதலை செய்யப்பட்ட 13 பணயக் கைதிகளில் ஒருவரால் மேற்கு ஜேர்மனியில் படிக்கப்பட்டது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மன்னர் ஷாவை ஈரானுக்கு அனுப்பும் பட்சத்தில் அவர் மீது நீதியான நேர்மையான விசாரணை நடைபெறும்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரே தனிப்பட்ட முறையில் நடைபெறும் இவ்விசாரணையை நேரில் அவதானிக்கலாம்.

### உஷார் நிலையில் ஈரான் கடற்படை

இதே சமயம், ஈரான் மீது அமெரிக்கா இராணுவ நடவடிக்கை எடுக்கும் அறிவித்தலை அடுத்து ஈரானிய கடற்படைகள் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக தெஹ்ரான் செய்திகள் தெரிவிக்கின்றன. (இ)

# மக்கா பள்ளிவாசல் இன்னும் தீவிரவாதிகள் வசம்

### சவூதி படைகள் தாக்கவில்லை என்கிறார் இளவரசர்

மக்கா, நவ 22

மக்காவிலுள்ள பெரிய பள்ளிவாசலை ஆயுத முனையில் கைப்பற்றிய தீவிரவாதிகள் தொடர்ந்தும் சுமார் 40 பேரை பணயம் வைத்துக் கொண்டு அப் பள்ளிவாசலிலேயே தங்கியிருக்கின்றனர் என்று சவூதி அரேபிய செய்திகள் தெரிவிக்கின்றன.

பள்ளிவாசல் ஆயுதம் தாங்கியவர்களிடமிருந்து மீட்கப்பட்டதாகவும் தீவிரவாதிகள் சவூதிப்படைகளினுல் அடித்து விரட்டப்பட்டதாகவும் ஏற்கனவே வெளிவந்த செய்திகள் தவறானவை என்றும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

16 ஆயிரம் முஸ்லிம்கள் காலைத் தொழுகை நடத்திக் கொண்டிருந்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றதாகக் கூறப்பட்டது.

முஸ்லிம்களைப் புண்படுத்தும் என்பதற்காக பள்ளிவாசலில் துப்பாக்கிப் பிரயோகம் இடம்பெறவில்லை என்றும் தீவிரவாதிகள் அடித்து விரட்டப்படவில்லையென்றும் சவூதி அரேபிய முடிக்குரிய இளவரசர் அப்துல் பீஸ் தெரிவித்துள்ளார்.

ஆயுதம் தாங்கிய வீரர்கள் யார் என்பதைக் கூறமுடியாதிருப்பதாகவும் இளவரசர் கூறினார்.

இதே வேளையில் பெரிய பள்ளிவாசல் உள்ள பகுதியில் 24 மணிநேர ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. (இ)

ஸி. ஐ. ஏ.க்கு உளவு கொடுத்த

# அமைச்சரின் பெயரை இந்திரா வெளியிட வேண்டும்

### தேசாய், சரண்சிங் கோரிக்கை

புதுடில்லி, நவ. 22

முன்னைய பிரதமர் திருமதி இந்திராகாந்தியின் அமைச்சரவையிலிருந்து கொண்டு அமெரிக்க உளவு ஸ்தாபனத்திற்கு இந்திய பாதுகாப்பு இரகசியங்களைத் தெரிவித்த அமைச்சரின் பெயரை திருமதி காந்தி வெளியிட வேண்டுமென்று முன்னாள் பிரதமர் திரு மொரார்ஜி தேசாயும் தற்போதைய பிரதமர் திரு சரண்சிங்கும் கேட்டுள்ளனர்.

மேற்கண்டவாறு குற்றம் சாட்டப்பட்ட அமைச்சரின் பெயரை திருமதி காந்தி பகிரங்கமாக வெளியிடவேண்டுமென்று திரு. தேசாய் புதுடில்லியில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் கூறினார்.

இடைக்காலத்தேர்தல் ஒத்திவைக்கப்படமாட்டாது [illegible]

### பணயக் கைதிகள் கட்டிவைக்கப்பட்டுள்ளனர்

வாஷிங்டன், நவ 22

அமெரிக்க தூதரகத்தில் உள்ள அமெரிக்க பணயக் கைதிகள் இரவும் பகலும் தனித்தனியே கட்டிவைக்கப்பட்டுள்ளனர் என்று அமெரிக்க செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

இதேவேளையில் பணயக் கைதிகளுக்கு எதுவித ஆபத்தும் ஏற்படக்கூடாது என்று அமெரிக்கா ஈரானுக்கு மீண்டும் கடுமையாக எச்சரித்துள்ளது. (இ)

### 'ஈழநாடு' இந்திய தேர்தல் போட்டி

(1) தனிக்கட்சி அரசு / கூட்டரசாங்கம்? :.........................

(2) ஆட்சி அமைக்கும் அரசு பெறும் மொத்த ஸ்தானங்கள்? .....................

(3) தமிழ்நாட்டில் எக்கட்சி கூடுதல் ஸ்தானங்கள் பெறும்?.....................

(4) புதிய பிரதமர் யார்?.....................

பெயர்:.....................

விலாசம்:.....................


.....................

.....................

..................... கையொப்பம் ..................... திகதி

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி:

தேர்தல் போட்டி "ஈழநாடு", த. பெ: எண்: 49, யாழ்ப்பாணம்.


**தமறேன்**

அனைத்தையும் அழிப்பது

தமறேன் 60% எஸ். சி. தனிச் சிறப்புள்ள கிருமிநாசினி. அது பல விதங்களில் செயற்படும்; பூச்சிகளின் உடல் முழுதும் செறிந்தும், நிலைத்து நின்றும், பட்ட மாத்திரத்திலும் உட்சென்று தாக்கியும் செயற்படும் பல சிறப்புகள் கொண்டது. கொறிக்கும், உறிஞ்சும், துளைக்கும் பூச்சி புழுக்களையும், மூட்டுப் பூச்சி, அழுக்கணவன், வண்டு, அந்துப்பூச்சி, மயிர்க்குட்டி, இலைப்பூச்சிகள், தாவர மூட்டுப் பூச்சிகள், இலைத் தத்துவெட்டிகள், சந்துக்குத்திகள், மற்றும் நெல், பருத்தி, நாரத்தை முதலாம் புளி மரங்கள், காய்கறிகள், மிளகாய், கரும்பு, அவரை, சோளம், உருளைக்கிழங்கு, வெங்காயம், புகையிலை, கனி மரங்கள், அலங்காரத் தாவரங்கள் ஆகியவற்றைத் தாக்கும் எல்லாப் பூச்சி இனங்களையும் கட்டுப்படுத்த உலகெங்கும் தமறேன் பரவலாகப் பாவிக்கப்படுகிறது.

தமறேன் பல முனைச் சக்தி கொண்டதாகையால், பல்வேறு விதமான பூச்சியினத் தாக்குதலுக்கு ஆளாகும் பயிரினங்களுக்குப் பாவிக்க அது மிகவும் ஏற்றது.

பாவியுங்கள் BAYER தரமான பீடைநாசினிகள்

இலங்கையில் 'பாயர்' பீடை நாசினிகளின் உற்பத்தியாளர்கள்:

ஹேகெம் லிமிட்டெட்

50, பொஸ்டர் ஒழுங்கை

கொழும்பு 10.

தொலைபேசி: 93563

melADS

FINAL WEEK
**RANEE CINEMA - Jaffna**
Daily 5 Shows at 10-30 a.m. 2-15, 4-45, 7-15 & 9-45 p.m.
**THE EXORCIST**
COLOR — DO NOT MISS!
"த எக்ஸோர்சிஸ்ற்"
பிசாசினால் பிடிக்கப்பட்ட ஒரு சிறுமியின்
அவல நிலையை சித்தரிக்கும்
அதிபயங்கரச் சித்திரம்
(YOU SEE THIS FILM AT YOUR OWN RISK.)
(ADULTS ONLY)
(குறிப்பிட்ட சில தினங்கள் மட்டுமே — தவறவிடாதீர்கள்)

7-வது ஜனத்திரள் வாரம்
**ஸ்ரீதர்** (யாழ் நகர்)
தினசரி காலை 10-30, பி.ப 2-30, 6-15, 9-45
சிவாஜிகணேசன் - சுஜாதா
நடித்த
**தீபம்** (வெள்ளிவிழாச் சித்திரம்)
(வர்ணக்கலர்)

7-வது ஜனத்திரள் வாரம்
**மனோஹரா** யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி சுஜாதா, சந்திரமோகன், கவிதா,
தேங்காய் சீனிவாசன், மனோரமா, சுகுமாரி
நடித்த
முக்தா பிலிம்சாரின்
**அந்தமான் காதலி**
(வண்ணப்படம்)

**வின்ஸர்** யாழ்ப்பாணம்
தினசரி 10-30, பி.ப. 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நடித்த
**என் கடமை**
(புதிய பிரதி)

2ND POPULAR WEEK
**REGAL** Jaffna Daily at 2.00, 4-30, 7-00 & 9-30 p.m.
THIS IS LIKE NO ROBBERY
YOU'VE EVER IMAGINED
CHARLES GRODIN CANDICE BERGEN
IN
**11 HARROW HOUSE**
(Color)
(More Suitable For Adults)
NEXT ATTRACTION
**FRENCH CONNECTION NO: 2**

**ராஜா** (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-வாணிஸ்ரீ-நாகேஷ்
நடித்த
**நிறைகுடம்** (புதிய பிரதி)

தினசரி 3 காட்சிகள்
சனி-ஞாயிறு 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - லதா
**நினைத்ததை முடிப்பவன்**
(புதிய பிரதி) கலர்

**லிடோ** (யாழ் நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
**அபிமான்**
(ஹிந்தி)

**சாந்தி** யாழ்நகர். போன்: 7642.
வெற்றி நடைபோடும் 6வது ஜனத்திரள் வாரம்!
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45. காட்சிகள்
ஜெய்சங்கர்
ஸ்ரீதேவி
ஸ்ரீகாந்த்
எம். ஆர். ராதா
மனோரமா
**டாக்ஸி டிரைவர்**
-வண்ணத் திரையோவியம்-

'ஈழநாடு'
வெற்றிக்கிண்ண
# உதைபந்தாட்ட

## சுற்றுப்போட்டி டிச. 1-ல் ஆரம்பம்

"ஈழநாடு" வெற்றிக் கிண்ணத்திற்காக காங்கேசன்துறை பசுமேரியல் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நடத்தப்படவிருக்கும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி டிசம்பர் மாதம் 1ம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகின்றது. பசுமேரியல் விளையாட்டுக்கழகத்தின் பதினொராவது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடுமுகமாக இச்சுற்றுப் போட்டி நடைபெறுகிறது.

வடபகுதியில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே உதைபந்தாட்டத்தின் முன்னேற்றும் நோக்கத்துடன் நடத்தப்படுகிறது. இச்சுற்றுப்போட்டியின் விண்ணப்ப இறுதித் திகதி இம்மாதம் இருபதாம் திகதியாக இருந்தபோதிலும் அநேக விளையாட்டுக்கழகங்களின் வேண்டுகோளுக்கிணங்க விண்ணப்ப முடிவு திகதி இம்மாதம் இருபத்தெட்டாம் (28) திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை பட்டின சபை மைதானத்தில் ஆரம்பமாகும் இச்சுற்றுப்போட்டியில் தினமும் இருபோட்டிகளில் நான்கு கழகங்கள் மோத இருக்கின்றன.

போட்டிகள் நான்கு பிரிவுகளாக நடாத்தப்படும். முதலாம் பிரிவுப்போட்டி பதினொரு பேர், ஏழு பேர் என இருபிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இரண்டாம், மூன்றாம் பிரிவுப்போட்டிகள் நிறைக் கட்டுப்பாட்டுக்கமைய நடத்தப்படும். முதலாம் பிரிவின் பதினொரு பேர் கொண்ட போட்டி தவிர்ந்த ஏனையபோட்டிகள் எல்லாம் நொக்கட் முறையில் நடத்தப்படும்.

இச்சுற்றுப் போட்டியில் வெற்றிபெறும் சாம்பியன் கோஷ்டிகளுக்கு "ஈழநாடு" வெற்றிக் கிண்ணத்துடன் நான்கு வெற்றிக்கிண்ணங்களும் ஐந்து கேடயங்களும் அன்பளிப்புச் செய்யப்படும். இச்சுற்றுப்போட்டியின் இறுதிப்போட்டிகளை மின்னொளியில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை பசுமேரியல் விளையாட்டுக் கழகச் செயலாளர் திரு. என். கலைநாதனும் விளையாட்டுப் பிரிவுச் செயலாளர் என். நவரத்தினமும் செய்து வருகின்றனர். இறுதிப் போட்டிகள் பெருமளவில் நடைபெறும்.

மின்னொளியில் நடைபெறவிருக்கும் விசேட போட்டிகளில் வெளியிடங்களைச் சேர்ந்த கோஷ்டிகளும் மோதவிருக்கின்றன. (இ)

### மீண்டும் படக்காட்சி

(புலோலி)

புலோலி ப. நோ. கூட்டுறவுச்சங்கத்தின் தியேட்டரில் மீண்டும் இரவு இறுதித் தொடக்கம் படக்காட்சிகள் ஆரம்பமாகவுள்ளன.

இத்தியேட்டரில் கடந்த இரு மாதங்களுக்கு முன்னர் திடீர் தீவிபத்து ஏற்பட்டமையால் தியேட்டரின் பல பகுதிகள் எரிந்து சேதமுற்றது வாசகர் அறிந்ததே.

தற்போது இத்தியேட்டரின் திருத்த வேலைகள் மிகத்துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மாத இறுதியில் படக்காட்சிகள் ஆரம்பமாகவுள்ளதாகச் சங்கத்தலைவர் திரு. கே. வி. செல்வராசா தெரிவித்துள்ளார். (ஸ)

### அமைச்சரின...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வைக்கப்பட்டவரென அரசாங்கக்கட்சியைச் சேர்ந்தோர் கூறிவரும் அரசின் மீது மக்களுக்கு அவநம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கின்றது திரு. தேசாய் கூறினார்.

குற்றஞ் சாட்டப்பட்டுள்ள அமைச்சரின் பெயரை திருமதி காந்தி உடன்வெளியிட்டு அவ் விவகாரத்தை முடிவுக்கு கொண்டுவர வேண்டுமென்று திரு. சரண்சிங் கேட்டுக்கொண்டார்.

**விசாரணை ஆரம்பம்**

இதே வேளை இவ்விவகாரம் குறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டதாக பிரதிப் பிரதமர் திரு. வை. பி. சவான் தெரிவித்துள்ளார். (இ)

**நாகம்ஸ்** (சுன்னாகம்)
தினசரி 6-30, 9-30,
சனி. ஞாயிறு 2-30
ஜெமினி — தேவிகா
**வாழ்க்கைப் படகு**

2nd WEEK
**RIO** Jaffna Phone: 7607
Daily 4 Shows
**SWEENEY 2**
(Adults Only)

**வெஸ்லி**
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
சனி. ஞாயிறு 2-30
எம். ஆர்.- விஜயகுமாரி
**சாரதா**

## இன்றைய பலன்

கார்த்திகை மாதம் 7ம் திகதி
வெள்ளிக்கிழமை
(23-11-1979)

**மேடம்:** வடிக்கடை வைத்திருப்பவர்களுக்கு அதிக மேலும் குட்டி போடும். பண விவகாரங்கள் மகிழ்ச்சியை அளிக்கும். புகழ்தரும் காரியங்களில் ஈடுபடுவீர்கள்.

**இடபம்:** வேலைதிகாரியின் கண்டிப்புக்கு இலக்காகுவீர்கள். விவசாயத்துறை கவலைதரும் நிலை. தொழிலாளர்களின் தொல்லைகள் தோன்றி மறையும்.

**மிதுனம்:** கட்டி வெல்லப்போல் இனிக்கும் வாழ்க்கை. பசுமையான நினைவுகள் நெஞ்சில் அலைமோதும். காதல் வசப்பட்டவர்களுக்கு கனிவான தினம்.

**கடகம்:** பண முடையினால் பெரிதும் வேதனைப்படுவீர்கள். கடன் தொல்லைகளும் அதிகரிக்கலாம். நம்பியிருந்த இடத்திலிருந்து ஏமாற்ற செய்தியும் கிடைக்கக் கூடும்.

**சிங்கம்:** பிதாவழிமூலம் மகிழ்ச்சிகரமான செய்திகிட்டுமுண்டு. இறைவழிபாடு மேவிடும். பயனுள்ள பிரயாணம் ஒன்றும் மேற்கொள்ளப்படும்.

**கன்னி:** கட்டு வியாபாரத்தில் முன்னேற்றமுண்டு. பணம் பெலமும் உண்டு. குடும்ப சுகத்திற்கும் இடமுண்டு. சுமுகமான நாள்.

**துலாம்:** இலகுவான வரபலம் கிடைக்கும். சகோதர பாசம் தலை தூக்கி நிற்கும். வீட்டில் மகிழ்ச்சிகரமான சம்பவங்களுக்கு இடமுண்டு.

**விருச்சிகம்:** இன்று எதிலும் நிச்சயமற்ற நிலை உருவாகும். உணர்ச்சிவசப்படுவதால் வேண்டாத விளைவுகள் உண்டாகும். மன அடக்கம் விரும்பத்தக்கது.

**தனு:** தனிக்கப் பேசுவோர் விடயத்தில் எச்சரிக்கையுடன் இருக்கவும். கடமையில் தளர்ச்சி ஏற்படும். குடும்பத்திலும் குழப்பநிலை தென்படும்.

**மகரம்:** குடும்பத்திலும் குதூகல நிகழ்ச்சிகள் இடம்பெறும். வாழ்க்கையில் தரமும் உயரும். இலகுக்கு தக்கமை ஸ்தானம் கிடைப்பதற்கும் இடமேற்படும்.

**கும்பம்:** நினைவின் நிழலாட்டம் நிம்மதியை சிதறடிக்கும். அன்னியர்களின் தொடர்பு சிக்கலைத் தோற்றுவிக்கும். மட்டமான தினம்.

**மீனம்:** தாய்வழிமூலம் இலகுக்கு தனலாபம் கிடைக்கக்கூடும். அறிஞர்களின் வருகை உங்கள் உற்சாகப்படுத்தும். முதியவர் ஆசியும் உண்டு.

சோதிடக் கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

### அரச அதிபர்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு, ஹிஜ்ரி நூற்றாண்டு விழாவை யொட்டி யாழ் இறைச்சைதியில் விடுக்கும் வைபவத்தில் உரையாற்றிய யாழ் மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு. யோகேந்திர துரைசுவாமி, குறிப்பிட்டார்.

ஆரம்பத்தில், அல்ஹாஜ் என் எம் எஸ் முகைதீன் ஆலிம், இருவத் ஓதி வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

யாழ் மாவட்ட பொது ஜனத் தொடர்பு அதிகாரி திரு என் சண்முகசுந்தரம், யாழ் இதைச்சாலை சு. ரின்டன், திரு மெற்றலோமியஸ் உட்பட பலர் எம் எஸ் ஏ வினரும் கலந்து கொண்டனர். (செ)

### யாழ். எஸ் பி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போது அவர்களை அடையாளங் காணமுடியாததினால் டாக்ஸி வேகமாக சென்றதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளது.

டாக்ஸி சாரதி தாக்கப்பட்டதை தொடர்ந்து நேற்று முன்தினம் டாக்ஸி உரிமையாளர்கள், யாழ்ப்பாணத்தில் பூநகரியைச் சேர்ந்த 14 கார் உரிமையாளர்களை எச்சரித்ததாகவும் கூறப்படுகிறது. கார் உரிமையாளர்கள் பொலிஸில் புகார் செய்ததைத் தொடர்ந்து பொலிஸ் அதிபர் திரு இக்ஸ்லி விக்கிரமசூரிய டாக்ஸி உரிமையாளர்களை அழைத்து சம்பவத்தை விளக்கி கூறி சமரசம் ஏற்படுத்தி வைத்தார். (ஸ)

### பாக்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கோஷ்டி ஆட்டமுடிவில் 1விக்கட்டை இழந்து 31 ரன்களை எடுத்திருந்தது. நாளை வெள்ளிக்கிழமை ஒய்வு நாள்.

### அதிசய தென்னை

(யாழ்ப்பாணம்)

பத்து அடி உயரம் வளர்ந்த தென்னைமரமொன்று பத்து அடிக்கு மேல் கிளையொன்று விட்டு இரு கூறாக வளர்ந்துவருகிறது. இரு கிளைகளிலும் நிறைந்த தேங்காய்கள் காய்த்திருக்கின்றன.

இந்த இரு கிளைத் தென்னை ... தெல்லிப்பழை ... இல் வளர்ந்து வருகிறது

# "தமிழர் பிரச்னைகளை நாகரிகமாக தீர்த்துவையுங்கள்"

## பாராளுமன்றத்தில் கோப்பாய் எம். பி.

(கொழும்பு)

இந்து சமுத்திரப் பிரதேசம் சமாதானப் பிரதேசமாக இருக்க வேண்டுமாயின் இந்து சமுத்திர நாடுகளுக்கிடையே சமாதானம் நிலவ வேண்டும் நாட்டுக்குள் இனத்தவர்களும் சமாதானமாக வாழவேண்டும். தமிழ்ஈழத்தில் [illegible] இலங்கைக்குமிடையே மோதல் ஏற்பட்டு மூன்றாம் நாட்டவர் ஒருவர் இங்குவந்து அதில் தலையிட வைக்காமலிருக்க இந்நாட்டின் தமிழர் பிரச்னைகளை நாகரீகமான முறையில் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இதைச் செய்யுங்கள்

இவ்வாறு கோப்பாய் எம். பி திரு ஸி கதிரவேலுப்பிள்ளை நேற்று பாராளுமன்றத்தில் வரவு - செலவுத்திட்ட விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

### 400 ஆண்டுகளாக தமிழ் ஈழம் அபிவிருத்தி இல்லை

கடந்த நானூறு ஆண்டுகளாக தமிழ்ஈழம் அபிவிருத்தி செய்யப்படவில்லை. ஒல்லாந்தர், டச்சுக்காரர், ஆங்கிலேயருக்குப் பின்னர் தமிழ் ஈழத்தை இப்போது இங்குள்ளவர்கள் ஆட்சி செய்கிறார்கள்.

### ராணுவ ஆக்கிரமிப்பு; பொலிசார் ஒற்றர்

தமிழ் ஈழத்தில் இப்போது இராணுவ ஆக்கிரமிப்பு இடம் பெறுகிறது பொலிசார் ஒற்றர் வேலை செய்கிறார்கள். இவர்கள் எங்களை ஆளக்கூடாது தமிழ்ஈழத்திலிருந்து படைகள் வெளியேற வேண்டும்.

### எமது கையில் சிவில் நிர்வாகம்

எமது சிவில்நிர்வாகம் எமது கையில்ஒப்படைக்கப்படவேண்டும் அதன்பின்னர் இந்தப் பிரச்னைக்கு இடமில்லை.

ஜனாதிபதி திரு ஜே. ஆர். ஜெயவர்த்தனா என்னை ஒரு முறை தமிழ் ஈழத்தின் உணவுக்கு என்ன செய்வீர்கள்? என்று என்னிடம் கேட்டார். எமது பிரதேசத்தில் 90 வீதம் உற்பத்தி நிலம் அவற்றின் விளையும் உணவில் உங்களுக்கும் தருவோம்.

### சோஷலிஸ வாழ்வே வேண்டும்

எமக்கு சோஷலிஸ வாழ்வு தான் வேண்டும். அதன்மூலம் உங்களுடன் எதையும் பகிர்ந்து கொள்ளலாம்.

எமது பொருளாதார வாழ்வை நாம் வேறு திசையிலேயே நோக்குகிறோம்.

ஈழத்தையும் உங்கள் நாட்டுடன் சேர்த்துப் 'பட்ஜட்' தயாரித்துவிட்டீர்கள்.

'இலங்கை ஒரு நாடல்ல' என்ற பேச்சை நீங்கள் எடுக்காவிட்டால் நானும் எனது பேச்சை நிறுத்திவிடுவேன்

### பிரிட்டிஷார் இரு நாடுகளை ஒன்றாக்கினர்

நாம் ஒரு சுதந்திர நாட்டில் சுதந்திரமாக வாழ்ந்தோம் பிரிட்டன் எங்களை ஒன்றாக்கியது. பிரிட்டிஷார் நல்ல வியாபாரிகள் இரண்டு கவர்னர்களை வைத்து சம்பளம் கொடுக்க வேண்டுமென்பதற்காக இரு நாடுகளையும் ஒன்றாக்கி ஒரு கவர்னரை நியமித்தனர்

### "இரவல் உடையில் ஒரு மாப்பிள்ளை"

"இரவல் உடையில் ஒருமாப்பிள்ளை" போன்றதே இந்தப் 'பட்ஜட்'. இந்தச் சோஷலிச வாதியான நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் இப்போது முதலாளித்துவத்தை அமுல் செய்வதில் முன்னிற்கிறார்.

எனக்கும் நிதி அமைச்சருக்கும் இடையில் நீண்டகால உறவு இருக்கிறது அவரின் இரவல் உடையையே நான் விரும்பவில்லை.

### நாட்டை அடகுவைக்க முடியாது

வெளி நாடுகளிலிருந்து கடன் பெறலாமே ஒழிய நாட்டை வெளிநாடுகளிடம் அடகு வைக்க முடியாது

பெருமளவு வெளிநாட்டு உதவிகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த வரவு செலவுத்திட்டம் இந்நாட்டு மக்களின் சுயநிர்ணய உரிமைகளை பண்டமாற்று செய்யும் விதமாக அமைந்துள்ளது.

இந்த முதலாளித்துவ பட்ஜட்டில் உதவி வழங்கும் வெளிநாடுகளின் கொள்கைகள் பிரதிபலிக்கின்றன. (ம-இ)

## தனிமையில் சென்ற பெண்ணிடம் தாலிக்கொடி அபேஸ்!

(சாவகச்சேரி)

ஆஸ்பத்திரிக்கு மருந்தெடுக்கச்சென்ற பெண்ணின் தாலிக்கொடியை சைக்கிளில் வந்த இளைஞர் ஒருவர் அறுத்துக் கொண்டு ஓடிய சம்பவம் கடந்த புதன்கிழமை காலை சாவகச்சேரி வீதியில் நடைபெற்றது.

மீசாலை கேணியைச் சேர்ந்த நாகராசாவின் மனைவி நாகரத்தினம் என்பவரே தாலிக்கொடியைப் பறிகொடுத்தவராவார். சம்பவதினம் காலை மூத்திருந்த நாகரத்தினம் சாவகச்சேரி அரசினர் ஆஸ்பத்திரிக்குத் தனிமையாகச் சென்று கொண்டிருக்கும்போது பின்புறத்திலிருந்து சயிக்கிளில் வந்த நபர் யாரும் இல்லாத சமயம்பார்த்து திடீரெனத் தாலிக்கொடியை அறுத்துக்கொண்டு வேகமாக ஓடிமறைந்ததாக பொலிசில் செய்யப்பட்ட புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி சப்-இன்ஸ்பெக்டர் ஆரியபால விசாரணையை மேற்கொண்டு சந்தேகத்தின்பேரில் சாவகச்சேரியைச் சேர்ந்த செல்வரத்தினம் அல்லது செல்வம் என்ற இளைஞரை விசாரணைக்குட்படுத்தியுள்ளார்.

மூவாயிரம் ரூபா பெறுமதி வாய்ந்த தாலிக்கொடி என விசாரணையில் தெரியவந்துள்ளது (ஓ)

## இன்று நடைபெறும் உலக இந்து மாநாடு ஆலோசனைக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

அடுத்தவருடம் இலங்கையில் நடைபெறவிருக்கும் உலக இந்து மகாநாடு சம்பந்தமான ஆலோசனைக் கூட்டம் இன்று பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ இராசதுரை தலைமையில் நடைபெறவிருக்கிறது.

நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சார்ந்த இந்துசமய நிறுவனங்கள், இந்து இளைஞர் மன்றங்கள், இந்து மகளிர் மன்றங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் மற்றும் சைவப் பிரமுகர்களும் இந்த ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொள்கிறார்கள்.

### வெகுஜன இயக்கம் தந்தி

உலகஇந்து மகாநாடு ஆலோசனைக் கூட்டம் சம்பந்தமாக பிராந்திய அபிவிருத்தி அமைச்சர் திரு. செ இராசதுரைக்கு தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் அனுப்பிவைத்துள்ள தந்தியில் வடபிராந்தியத்தில் உள்ள ஐந்து லட்சம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலய வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்றும் இந்த மனித உரிமைக்கு உடனடியாக நிவாரணம் காண நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் கோரியுள்ளனர். கடந்த ஒக்டோபரில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் மூன்றாவது மகாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானங்களும் மகாநாட்டின் அறிக்கையையும் பிராந்திய அபிவிருத்தி, இந்து கலாச்சார அமைச்சர் திரு. செ இராசதுரைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### மணிவாசகர்...

(12-ம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் முத்தமிழ் அரசு, சைவச்செம்மல் வித்துவான் இரா செல்வக்கணபதி,வருகை தரவுள்ளார் இவரோடு விழாவில் கலந்துகொண்டு சிறப்புச் சொற்பொழிவாற்ற புலவர் செ. சந்திரசவும் வரவிருக்கிறார்.

விழாவின் ஓர் அங்கமாக காரைநகர்ப் பாடசாலை மாணவர்களிடையே நடத்தப்பட்டு வருகின்ற சைவசமயப்பாடப் பரீட்சை இம்மாதம் 25ந்திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் காரைநகரில் உள்ள பதினைந்து பாடசாலைகளில் இருந்தும் ஆயிரத்து ஐந்நூறு மாணவர்கள் தோற்றவுள்ளனர். (க)

## ஈரானுக்கு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமெரிக்கரும் இரண்டுபாகிஸ்தானியருக்கும் கொல்லப்பட்டவர்கள் என்று இப்போது தெரியவந்துள்ளது. கொல்லப்பட்ட பாகிஸ்தானியர் இருவரும் தூதரக ஊழியர்களாவர். புதன்கிழமை நடைபெற்ற இச்சம்பத்தின்போது தூதரக ஏனைய ஊழியர்களையும் ராஜதந்திரிகளையும் பாகிஸ்தான் படைகள் பாதுகாத்து அப்புறப்படுத்தியுள்ளன. இச்சம்பவம் குறித்து பாகிஸ்தான் ஜனாதிபதி அமெரிக்காவுக்கு வருத்தம் தெரிவித்துள்ளார் மெக்காவிலுள்ள புனித பகுதியில் நடைபெற்ற சம்பவத்தில் அமெரிக்கா சம்பந்தப்பட்டிருப்பதாக எழுந்த சந்தேகத்தின் பேரிலேயே பாகிஸ்தானியர் ஆவேசங்கொண்டு இப்படி நடந்திருக்கிறார்கள். ஆனால் மெக்கா சம்பவத்தில் மேற்கு நாடுகள் எதுவும் சம்பந்தப்படவில்லை யென்று அமெரிக்கா தெரிவித்துள்ளார்.

### இந்தியா கண்டனம்

உலக முஸ்லீம்களின் மிகப் புனித ஸ்தலமான மெக்கா பெரிய பள்ளிவாசலில் வன்முறைச் சம்பவம் இடம்பெற்றதை கண்டிப்பதாக இந்தியா அறிவித்துள்ளது பங்களாதேஷ் அரபு எமிரட்டுகள் எகிப்து ஆகிய நாடுகளும் இச்சம்பவத்தைக் கண்டித்துள்ளன

### சவூதி செய்தி

சவூதிஅரேபியாவின் மெக்கா பெரிய பள்ளிவாசலில் பணயம் வைக்கப்பட்டிருந்த அனைவரும் விடுவிக்கப்பட்டதாகவும் பள்ளிவாசலை முற்றுகையிட்டவர்களின் பெரும்பாலானவர்கள் கைது செய்யப்பட்டுவிட்டதாகவும் இவர்கள் அநேகமானவர்களும் சவூதி அரேபியர்கள் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில முற்றுகையாளர்கள் பள்ளிவாசலில் ஒளித்திருப்பதாகவும் இவர்களும் விரைவில் பிடிக்கப்படுவார்கள் என சவூதி அரேபிய அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.


## மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்டெட்

உங்களை திருச்சிராப்பள்ளி மதுரை, பம்பாய், கோலாலம்பூர், சிங்கப்பூர், பரிஸ், லண்டன், துபாய், சவூதி அரேபியா, கனடா ஆகிய நாடுகளுக்கு அழைத்துச்செல்ல

மற்றும் பாஸ்போட், அமெரிக்கன் டிறவலர்ஸ் செக் உலகின்எப்பகுதிக்கும் விமான டிக்கட், சுற்றுலாக்கள் ஆகிய உங்கள் தேவைகளை

கொழும்பு செல்லாமலே யாழ்ப்பாணத்தில் ஒழுங்குசெய்துகொள்ள இன்றே தொடர்புகொள்ளுங்கள்

**மக்கினென் டிரவல் சேர்விஸ் (இலங்கை) லிமிட்**

தபால்பெட்டி இல: 92

8, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி! 8154

பணம் உங்களது! சௌகரியமாக்குவது எங்களது!


## மரண அறிவித்தல்

### அருள்திரு. கீதபொன்கலன் துரைசிங்கம் அடிகளார்

யாழ் மேற்றிராசனத்தைச் சேர்ந்தவரும், முகமாலைப் பங்குத்தந்தையுமான அருள்திரு. கீதபொன்கலன் துரைசிங்கம் அடிகளார் காலமானார்.

அன்னாரின் அடக்கச் சடங்குகள் யாழ். பேராலயத்தில் நாளை சனிக்கிழமை (24-11-79) காலை 7-00 மணிக்குத் திருப்பலியுடன் நடைபெறும். 4163

## மரண அறிவித்தல்

### எஸ். எஸ். நாயகம்

கொல்லங்கலட்டியைச் சேர்ந்த மலேசியத் தொழிற்சங்கப் பிரமுகர் திரு. எஸ். எஸ். நாயகம் செவ்வாய் பிற்பகல் காலமாகிப் புதன் கிழமை மாலை குவலாலம்பூரில் தகனஞ்செய்யப்பட்டார். அன்னார் கொல்லங்கலட்டி காலஞ்சென்ற இலங்கைநாயகம், இராசரத்தினம், வாலாம்பிகை, இராசம்மா, அன்னம்மா, சோமசுந்தரம், மாவை நடராசா ஆகியோரின் சகோதரரும், சரவணமுத்து, செல்லத்துரை ஆகியோரின் மைத்துனருமாவர். உற்றார் உறவினர் நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும். 4161

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்க அச்சகத்தில் நவம்பர் மாதம் 23-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No; GP/8948/78 The Eelanadu P B No, 49. Telegram Eelanadu Phone: 889.